بسم الله الرحمن الرحيم      نحمده ونصلي على رسوله الكريم      وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 30

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

21 துல்கஃதா 1440 ஹிஜ்ரி கமரி 25 வஃபா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

25 ஜூலை 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَلْتَكُنْ مِّنْكُمْ أُمَّةٌ يَّدْعُوْنَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَأُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ○

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**உண்மையான அகப்பார்வையும் உண்மையான அறிவும் இறைவன் பக்கம் குனியாமல் ஒருபோதும் கிடைக்க முடியாது. எனவேதான் நம்பிக்கையாளர்களின் அகப்பார்வையிலிருந்து அஞ்சிக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது எவர்கள் அகப்பார்வையுடன் இறைவனது பணியையும், கூற்றுக்களையும் காண்பார்களோ மேலும் அதன்படி செயல்படுவார்களோ அவர்களே இறைவனுக்கு விருப்பமானவர்கள் ஆவர். மேலும் இந்த அனைத்து விஷயங்களும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தாமல் ஒருபோதும் கிடைக்கவே முடியாது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### உண்மையான அகப்பார்வை

உண்மையான அகப்பார்வையும், உண்மையான அறிவும் இறைவன் பக்கம் குனியாமல் ஒருபோதும் கிடைக்க முடியாது. எனவேதான் நம்பிக்கையாளர்களின் அகப்பார்வையிலிருந்து அஞ்சிக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர் இறைவனின் ஒளியினால் பார்க்கின்றார். நான் கூறியது போன்று எப்போது வரை இறையச்சத்தைப் பெறவில்லையோ அப்போது வரை உண்மையான அகப்பார்வையும், உண்மையான அறிவும் ஒருபோதும் கிடைக்க முடியாது.

நீங்கள் வெற்றி பெற விரும்பினால் அறிவைக் கொண்டு செயல்படுங்கள். சிந்தியுங்கள். சிந்திப்பது தொடர்பாகத் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனைப் பற்றிச் சிந்தியுங்கள்.

எப்போது உங்களது உள்ளம் தூய்மையாகி விடுமோ மேலும் அறிவைக் கொண்டு செயல்படுவீர்களோ மேலும் இறையச்சத்தின் வழிகளில் காலெடி எடுத்து வைப்பீர்களோ பிறகு رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ அதாவது (எங்கள் இறைவா! நீ இதனை வீணாகப் படைக்கவில்லை. நீ தூய்மையானவன். எனவே நீ எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. 3:192) என்று உங்கள் உள்ளத்தில் வெளிப்படும்.

### இல்ஹாம் என்ற ஒளி

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெறும் அறிவை மட்டும் அன்பளிப்பாக வழங்கி அருள்பாலிக்கவில்லை. மாறாக, இல்ஹாம் என்ற ஒளியையும், பிரகாசத்தையும் அவனுக்கு வழங்கியுள்ளான். மேலும் தத்துவவாதிகள் செல்ல விரும்புகின்ற வழிகளில் இவர்கள் செல்லக்கூடாது. அத்தகைய மக்களிடம் ஆன்மீக ஆற்றல் பலவீனமாக இருக்கின்றது.

பாருங்கள். திருக்குர்ஆனில் அல்லாஹ் தனது அடியார்கள் தொடர்பாக أُولِي الْأَيْدِي وَالْأَبْصَارِ என்று கூறுகின்றான். (38:46)

எங்குமே அவர்கள் அகப்பார்வை அற்றவர்கள் என்று கூறவில்லை. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், எவர்கள் அகப்பார்வையுடன் இறைவனது பணியையும், கூற்றுக்களையும் காண்பார்களோ மேலும் அதன்படி செயல்படுவார்களோ அவர்களே இறைவனுக்கு விருப்பமானவர்கள் ஆவர். மேலும் இந்த அனைத்து விஷயங்களும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தாமல் ஒருபோதும் கிடைக்கவே முடியாது.

### எனது இந்த விஷயத்தின்படி செயல்படுங்கள்

எனது இந்த விஷயமானது நீங்கள் என்னுடன் தொடர்பு வைத்திருப்பதனாலேயே ஆகும். இந்த தொடர்பின் காரணமாக எனது உறுப்பாக நீங்கள் ஆகிவிட்டீர்கள். உண்மையான அகப்பார்வை மற்றும் உண்மையின் ஒளி உங்களிடம் ஏற்படுவதற்கும், மேலும் நீங்கள் மற்ற மக்களை இருளிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்கான வழியாக ஆகுவதற்கும் இந்த விஷயத்தின்படி செயல்படுங்கள். மேலும் அறிவு மற்றும் இறைனின் வார்த்தைகளின்படி பணி செய்யுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 56–58 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையும், கலப்பற்ற, பற்றுணர்வு மற்றும் பத்ர் போர் சஹாபியுமான ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து உள்ளத்தை ஈர்க்கக்கூடிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்ட விவரம் தொடர்பான மேலும் அதிகப்படியான குறிப்புகள் மற்றும் இது தொடர்பாக பலவீனமான அறிவிப்புகளின் தாக்கத்திற்கு ஆளாகிய எழுத்தாளர்களின் ஆட்சேபனைகளுக்கு ஆதாரப்பூர்வமான பதில்கள்**

**அன்பிற்குரிய மர்யம் சல்மான் குல் அவர்களின் மரணம் – மர்ஹுமாவின் நற்குறிப்பு மற்றும் ஜனாஸா தொழுகை**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 21 ஜுன் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா சம்பந்தமாகக் கூறி வந்தேன். ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பின்னர் திருமணம் நடந்தது. அது பற்றி மேலும் சில விஷயங்களைக் கூற வேண்டியுள்ளது என்று கூறினேன். ஹஸ்ரத் ஸைனப் பின் ஜஹ்ஷ் அவர்களுக்குத் திருமணம் நடக்கும்போது 35 வயதாக இருந்தது.

அரபு மக்களின் சூழ்நிலையின்படி இந்த வயது பெரிய வயதாகக் கருதப்பட்டது. ஸைனப் (ரலி) அவர்கள் மிகவும் சிறந்த இறையச்சம் உள்ளவராகவும், தூய்மையாளராகவும், செல்வந்தராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துணைவியரில் ஹஸ்ரத் ஸைனப் எத்தகையவர் என்றால் ஹஸ்ரத் ஆயிஷாவுடன் போட்டியிடுபவராக இருந்தார்.

இது பற்றி முன்னர் கூறப்பட்டது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இறையச்சம் மற்றும் தூய்மையில் மிகச் சிறந்தவராக இருந்தார்கள் என்ற போதிலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஸைனப் அவர்களை விட நல்ல பெண்ணைப் பார்த்ததில்லை. அவர் மிகவும் இறையச்சமும், உண்மை பேசுபவரும், உறவுகளைப் பேணுபவராகவும் இருந்தார்கள்.

மிகவும் அதிகமாக ஸதகா மற்றும் நன்மைகள் உடையவராக இருந்தார். நன்மை மற்றும் இறை நெருக்கம் ஆகியவற்றில் மிகவும் முன்னேறியவராக இருந்தார். இவ்வளவு விஷயங்கள் இருந்தும் அன்னாரின் இயல்பில் சற்று வேகம் இருந்தது. வேகத்திற்குப் பிறகு தாமே வெட்கப்படுபவர்களாகவும் இருந்தார்கள்.

ஸதகா மற்றும் நற்செயல்களில் அவர்களின் நிலை எவ்வாறிருந்தது என்றால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: أَسْرَعُكُنَّ لَحَاقًا بِيْ أَطْوَلُكُنَّ يَدًا – உங்களில் எவர் அதிகமாக கை நீளமுள்ளவராக இருப்பரோ அவர் எனது மரணத்திற்குப் பிறகு என்னை முதலில் சந்திப்பார்கள்.

நாங்கள் உடனே எங்கள் கைகளை அளந்து பார்த்தோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஸைனப் பின்த் ஜஹ்ஷ் உடைய மரணம் நிகழ்ந்தபோது தான் கை என்பது தான தர்மங்கள் என்ற கையாகும் என்ற இரகசியம் எங்களுக்குத் தெரிய வந்தது. கை என்பது வெளிப்படையான கை அல்ல.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் ஸைனப் உடைய திருமண விஷயத்தில் மதீனாவின் நயவஞ்சகர்கள் பல ஆட்சேபனைகளைச் செய்தார்கள். வீணான புலம்பல்களைச் செய்தனர். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது மகனுக்கு திருமணம் செய்து வைத்து பிறகு தமது மருமகளை தமக்கு ஆகுமானதாக்கிக் கொண்டார்கள் என்றனர்.

இந்த திருமணத்தின் நோக்கமே இந்த அறிவீனமான சம்பிரதாயத்தை அழிப்பதாக இருந்தது. பிறகு இந்த வசைமொழிகளைக் கேட்பதும் அவசியமாக இருந்தது. இந்த இடத்தில் இதனைக் குறிப்பிடுவதும் அவசியமாகும். இப்னு இஸ்ஹாக் மற்றும் தப்ரி ஆகியோர் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் பற்றி அடிப்படையற்ற சில அறிவிப்புகளை எழுதியுள்ளார்கள். இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய பண்புகளுக்கு எதிரில் ஆட்சேபனை செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. எனவே சில கிறித்தவ வரலாற்றாசிரியர்கள் மிகவும் அநாகரிகமாக பார்த்தனர். தமது நூல்களில் எழுதினார்கள். அந்த அறிவிப்பு இதுவாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைனபை ஸைதுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். பிறகு ஒரு சமயம் அன்னார் ஸைத் இருந்த வீட்டிற்குச் சென்றார்கள். அப்போது தற்செயலாக ஸைத் வீட்டில் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியில் நின்று ஸைதை அழைத்தார்கள். அவர் வீட்டில் இல்லை என்று ஸைனப் பதில் கூறினார்கள்.

அத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது குரலை அறிந்து கொண்டவாறு, வந்து விட்டேன் அல்லாஹ்வின் தூதரே! எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம்! தாங்கள் உள்ளே வாருங்கள் என்றார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டு திரும்பத் தொடங்கினார்கள்.

அறிவிப்பாளர் மேலும் எழுதுகிறார்: ஸைனப் எப்படி பயந்து போய் எழுந்து வந்தார்கள் என்றால், அவர்களின் உடலில் துணி இருக்கவில்லை. வீட்டின் கதவு திறந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வை அவர்கள் மீது பட்டது. நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது அழகினால் கவரப்பட்டு ஒரு வார்த்தையைக் கூறியவாறு திரும்பினார்கள்.

سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ سُبْحَانَ اللّٰهِ مُصَرِّفِ الْقُلُوْبِ அல்லாஹ் தூயவன். மகத்தானவன். தூயவன் கையில் மக்களின் உள்ளம் உள்ளது. அவன் விரும்புவதைச் செய்கிறான்.

ஸைத் பின் ஹாரிஸா திரும்பி வந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்கு வந்தது குறித்து ஸைனப் கூறினார்கள். ஸைத் கேட்டதற்கிணங்க ஹஸ்ரத் ஸைனப், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய வார்த்தைகளை எடுத்துரைத்தார். நான் உள்ளே வாருங்கள் என்று அழைத்தேன். அன்னார் மறுத்து விட்டு திரும்பிச் சென்று விட்டார்கள்.

இதனைக் கேட்டு விட்டு ஸைத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களுக்கு ஸைனபை பிடித்து விட்டதா? நீங்கள் விரும்பினீர்கள் என்றால் நான் அவரை மணவிலக்கு கொடுத்து விடுகிறேன். நீங்கள் பிறகு திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றார்கள். அன்னார் கூறினார்கள்: ஸைத் இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். ஸைனபுக்கு தலாக் கொடுத்து விடாதீர்.

ஆனால் மேலும் எழுதுகிறார்: பிறகு ஸைத் மணவிலக்கு கொடுத்து விட்டார். இந்த அறிவிப்பை இப்னு இஸ்ஹாக், தப்ரி போன்றவர்கள் எடுத்து எழுதியுள்ளார்கள். இந்த அறிவிப்பை ஆட்சேபனை இல்லாத வகையில் அறிவிக்க முடியும். என்றாலும் உண்மையில் இந்த முழு கதையும் முற்றிலும் தவறும் பொய்யும் ஆகும். ஹதீஸின் கருத்திலிருந்து இந்த அறிவிப்பு எல்லா வகையிலும் பொய் என்பது வெளிப்படை. அறிவிப்பின்படி, அதன் அறிவிப்பாளர்கள் கூற்றுப்படி இவ்வளவு கூறியது போதுமானது.

இந்த கதையின் அறிவிப்பாளர்கள் வாகித் மற்றும் அப்துல்லாஹ் பின் அம்ர் அஸ்லமி ஆவார்கள். இவ்விருவரும் ஹதீஸ் வல்லுனர்களின் பார்வையில் மிகவும் பலவீனமானவர்களும் நம்பத்தகாதவர்களும் ஆவர். வாகித் தவறான விளக்கம் தருவதில் எவ்வளவு பிரபல்யமானவர் எனில் அவரைப் போன்று முஸ்லிம் என்று அழைக்கப்படக்கூடிய அறிவிப்பார்களில் இவரைப் போன்றவர் எவரும் இல்லை.

அவர்களுக்குரிய இந்த அறிவிப்புக்கு எதிரில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எடுத்துக் கூறியுள்ள அறிவிப்புகளில் ஸைத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து ஹஸ்ரத் ஸைனப் உடைய விரும்பத்தகாத நடவடிக்கைகள் குறித்து கூறியது பற்றி எழுதப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். மணவிலக்கு கொடுக்க வேண்டாம் என்று கூறியிருந்தார்கள்.

இந்த அறிவிப்பு புகாரியின் அறிவிப்பாகும். நண்பர் பகைவர் இருவரின் பார்வையிலும் நம்பத்தகுந்த பதிலாக காணப்படுகிறது. அதற்கு எதிரில் எந்த அரபு மக்களுக்கும் விரலை நீட்ட வாய்ப்பு கிடைக்கவில்லை. விதிமுறைகளின்படி இந்த இரு அறிவிப்புகளின் தரம் இப்னு சஅதுடைய அறிவிப்பு தவறு என்பதில் எந்த சந்தேகமும் இருக்காது.

ஸைனப், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மாமி மகள் ஆவார். அன்னார்தான் வலியாக இருந்து ஸைத் பின் ஹாரிஸாவுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். மற்றொரு விஷயமும் மறுக்க முடியாதது. அதுவரை முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதில்லை.

மாறாக பர்தா குறித்த ஆரம்ப கட்டளையே ஸைனபை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்த பிறகுதான் இறங்கியது. இந்நிலையில் ஸைனபை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் கண்டதே இல்லை என்று கூறுவது, பொதுவாக காண முடிந்த ஒருவர் அன்னாரின் கண்களில் படவில்லை என்பது மிக மிகத் தெளிவான பொய்யாகும். அதனை தவிர இதற்கு வேறு முக்கியத்துவம் இல்லை. நிச்சயமாக இதற்கு முன் ஆயிரக்கணக்கான முறை ஸைனபை பார்த்திருப்பார்கள். அவர்களின் உடலின் வனப்பு அனைத்தும் அன்னாருக்கு தெரிந்திருக்கும். எனவே திரையில்லாமல் பார்த்தல், திரையோடு பார்த்தல் என்பதில் எந்த வித்தியாசமும் ஏற்படாது.

நெருங்கிய சொந்தமாகவும் இருந்தது. மேலும் அப்போது பர்தாவின் நடைமுறை மற்றும் கட்டளை தொடங்கி இருக்கவில்லை. எப்போதும் நேரடியாக சந்திக்க முடிந்தது. இதனால் திரையில்லாமல் பலமுறை அன்னார் பார்த்திருப்பார்கள். ஸைனப் அன்னாரை உள்ளே வருமாறு கூறியதில் இருந்து தெரிய வருவதாவது, அன்னாரின் உடலில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய எதிரில் வரும் அளவுக்கு கண்டிப்பாக ஆடை இருந்திருக்கிறது.

எனவே எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இந்த கதை மிகவும் பொய்யானது. அதில் எந்த உண்மையும் இல்லை என்று தெரிகிறது. இந்த ஆதாரங்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முழுமையான பரிசுத்தம் மற்றும் தூய வாழ்வைக் கவனத்தில் கொண்டால் அன்னாரின் ஒவ்வோர் அசைவும் அமைதியும் தெளிவானது. அதற்குப் பிறகு இந்த வீணான பொய்யான சம்பவம் நடந்திருக்கவே முடியாது.

இதன் காரணத்தால்தான் ஆய்வு செய்பவர்கள் இந்த அறிவிப்பை பொய் மற்றும் செயற்கையானது என்று கருதியிருந்தார்கள். உதாரணமான ஹஸ்ரத் அல்லாமா இப்னு ஹஜ்ர் பத்ஹுல் பாரியிலும், அல்லாமா இப்னு கஸீர் தமது தஃப்ஸீரிலும், அல்லாமா தர்கானி தமது ஷரஹ் முவாஹிதிலும் இதனை முற்றிலும் பொய்யானதாகக் கருதி இதனைக் குறித்து சிறிது குறிப்பிடுவது கூட உண்மைக்கு மாறு செய்வதாகும் என்று கருதினார்கள். பிற ஆய்வாளர்களின் நிலையும் இதுவே. ஆய்வாளர்களுடன் மட்டும் நிற்கவில்லை. இந்த தாக்கம் எவரையும் குருடாக வைக்கவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: நாம், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை ஒத்துப் பார்த்து எடுத்து வைக்கிறோம். சில நயவஞ்சகர்களால் தம் தரப்பிலிருந்து இட்டுக்கட்டி இந்த அறிவிப்பைச் செய்துள்ளனர். அவர்களது பணியே எல்லா வகையான அறிவிப்புகளையும் ஒன்று சேர்ப்பதாகவே இருந்தது.

இதனை அவர்கள் எந்த ஆய்வும் செய்யாமல் தமது வரலாற்றில் இடமளித்தார்கள். சில முஸ்லிம் அல்லாத வரலாற்றாசிரியர் மதத் துவேஷத்தால் குருடாகி இதனை தமது நூலுக்கு மெருகூட்டுவதாக ஆக்கிக் கொண்டனர். இந்த செயற்கையான ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும்.

மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் தமது சீரத் காத்தமுன்னபிய்யீனில் எழுதுகிறார்கள்:

அக்காலம் இஸ்லாமிய வரலாற்றுக் காலமாகும். அப்போது மதீனாவின் நயவஞ்சகர்கள் முழு வேகத்தில் இருந்தார்கள். அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் உடைய தலைமையில் இஸ்லாத்திற்கு எதிராக ஒரு முறையான சூழ்ச்சி, இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் நிறுவனர் மீதும் கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கில் செய்யப்பட்டது. அவர்களின் நடைமுறை பொய்யான செயற்கையான கதைகளை மெருகேற்றி மறைவாக பரப்புவதாக இருந்தது.

அதே வேளையில் அசல் விஷயம் வேறு ஒன்றாக இருக்கும். அதற்கு இவர்கள் தமது தரப்பில் வேறு சாயம் பூசி நூறு வகை பொய்யை அதில் சேர்த்து அதனை பிரபல்யப்படுத்தினர்.

இந்த வகையில் திருக்குர்ஆனில் சூரா அஹ்ஸாபில் ஹஸ்ரத் ஸைனப் உடைய திருமணம் பற்றி குறிப்பிடும்போது அத்துடன் மதீனாவில் நயவஞ்சகர்கள் குறித்தும் கூறியது. அவர்களின் விஷயத்தைக் குறித்து சைக்கினை செய்தவாறு அல்லாஹ் கூறுகிறான்:

لَئِنۡ لَّمۡ یَنۡتَہِ الۡمُنٰفِقُوۡنَ وَالَّذِیۡنَ فِیۡ قُلُوۡبِہِمۡ مَّرَضٌ وَّالۡمُرۡجِفُوۡنَ

فِی الۡمَدِیۡنَۃِ لَنُغۡرِیَنَّکَ بِہِمۡ ثُمَّ لَا یُجَاوِرُوۡنَکَ فِیۡہَاۤ اِلَّا قَلِیۡلًا

நயவஞ்சகர்கள் மற்றும் உள்ளத்தில் நோய் உள்ளவர்கள் மதீனாவில் பொய்யான செய்தியைப் பரப்புவர்கள் தமது இந்த செயல்களிலிருந்து திரும்பவில்லை எனில், நபியே! நாம் அவர்களுக்கு எதிரில் கை உயர்த்த அனுமதிப்போம். பிறகு இவர்கள் மதீனாவில் தங்க முடியாது. (33:61)

இந்த வசனம் இந்த கதை தெளிவான பொய் என்பதை சுட்டிக் காட்டுகிறது. இதற்குப் பிறகு ஹஸ்ரத் ஆயிஷாவுக்கு எதிரில் அவதூறு கூறிய ஆபத்தான நிகழ்ச்சி பற்றி வருகிறது. அப்துல்லாஹ் பின் ஸலூல் மற்றும் அவனது தீய நண்பர்கள் இந்த இட்டுக்கட்டை விவாதமாக ஆக்கினார்கள். முஸ்லிம்கள் நலமாக வாழ்வதையே நெருக்கடிக்குள்ளாக்கும் விதத்தில் சாயம் பூசினார்கள்.

சில பலவீனமான இயல்பு கொண்டவர்களும், தெரியாத முஸ்லிம்களும் இந்த தீய பொய்ப் பிரச்சாரத்திற்கு இரையாகினர். சுருக்கமாக இக்காலம் நயவஞ்சகர்கள் குறிப்பான வேகத்தில் இருந்த காலமாகும். அவர்களுக்கு மிகவும் மனதுக்குப் பிடித்த ஆயுதம் பொய்யான அசுத்தமான குற்றச்சாட்டைப் பரப்புவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் தொடர்பில் இருப்பவர்கள் மீது கெட்ட பெயர் ஏற்படுத்துவதும் ஆகும். இது மிகவும் திட்டமிட்டு பரப்பப்பட்டது. சில நேரங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் சஹாபாக்கள் விவரமான தகவல் அறியாததால் அதனை மறுத்துப் பேசவும் இயலாமல் இருந்தனர்.

இவ்வாறு இந்த விஷயம் உள்ளுக்குள்ளேயே பரவியது. இந்நிலையில் பின்னால் வந்து அதிகம் ஆய்வு செய்யும் வழக்கம் இல்லாத முஸ்லிம்கள் அதனை உண்மை என்று நம்பி அதனை அறிவிக்கத் தொடங்கினர். இவ்வாறுதான் இந்த வாகிதி போன்ற வகை முஸ்லிம்கள் தமது தொகுப்பில் சேர்த்தனர். நாம் ஏற்கனவே கூறியது போன்று நம்பத்தகுந்த ஹதீஸ்களின் பெயரும் அடையாளமும் கூட இவற்றில் இல்லை. ஆய்வாளர்கள் அதை ஏற்கவும் இல்லை.

ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் உடைய கதையில் சர் வில்லியம் மூர் போன்ற சிறந்த அறிவாளி என்று நம்பப்பட்டவரும் கூட வாகிதியின் இந்த தவறான செயற்கைளான அறிவிப்பை ஏற்றுக் கொண்டு உள்ளம் நோகும்படி பழித்துள்ளார். (இந்த ஆட்சேபனையாளருக்கு இந்த நம்பிக்கை இருந்திருக்கும்.

பிறகு அவருக்கு முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஆதாரமும் கிடைக்கும்போது மேலும் பழித்துரைக்க வாய்ப்பு கிடைக்கிறது.) வயது ஏற ஏற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மன எழுச்சியும் வளர்ந்து வந்தது. (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பல துணைவியர்களின் கூடுதல் எண்ணிக்கைக்கு இந்த உணர்வுதான் காரணம் என்று மூர் சாஹிப் கருதி விட்டார். அன்னாருக்கு மனயிச்சை இருந்ததாக எழுதுகிறார். (நவூதுபில்லாஹ்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதியுள்ளார்கள்.

நானும் ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையில் இதனை கூறுகிறேன். எந்த மத சம்பந்தமான சர்ச்சையில் இறங்காமல் ஒரு வரலாற்றுச் சம்பவம் தவறான முறையில் எழுதப்படும்போது அதனை பார்த்து ஒருதலைப்பட்சமான நடைமுறைக்கு எதிரில் குரல் எழுப்புவதிலிருந்து விலக முடியாது. மார்க்க உணர்வுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பரிசுத்தம் குறித்து ஓர் உண்மையான முஸ்லிம் நம்பிக்கையாளர் தனது உயிரைக் கூட விடலாம். வீணான விஷயங்களைக் கொண்ட வரலாற்றுக் கருத்துக்களை மறுக்கவே செய்வார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்தார்கள் என்பது சந்தேகமின்றி வரலாற்று உண்மையாகும். இது ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மையாகும். ஹஸ்ரத் கதீஜா (ரலி) தவிர மற்ற அனைத்து திருமணமும் வயது முதிர்ந்த காலத்தில் செய்யப்பட்ட திருமணங்கள் என்று கூறலாம். ஆனால் எந்த வரலாற்று சாட்சியங்களும் இல்லாமல் இன்னும் கூறுவதாயின், வரலாற்று சாட்சியத்திற்கு எதிராக உடல் தேவைக்காக திருமணம் செய்தார்கள் என்று கருதுவது (நவூதுபில்லாஹ்) வரலாற்று ஆசிரியரின் பெருமைக்கு மிகவும் தூரமானதாகும்.

ஒரு கண்ணியமான மனிதனின் தகுதிக்கு மாற்றமானதாகும். மூர் சாஹிப் இந்த உண்மையை தெரியாதவர் அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 25 வயதில் 40 வயதுடைய முதிர்ந்த வயதுடைய விதவைப் பெண்ணை திருமணம் செய்தார்கள். பிறகு 50 வயது வரை சிறப்புடனும் நன்றியுணர்வுடனும் அதனை பேணி வந்தார்கள். அதற்கு முன்னுதாரணமே இல்லை. அதற்குப் பிறகு அன்னார் 55 வயது வரை ஒரேயொரு மனைவியுடன் இருந்தார்கள். அதுவும் கூட ஹஸ்ரத் சவ்தா ஒரு விதவையாக இருந்தார்கள். முதிர்ந்த வயது வேறு.

இந்த எல்லாக் காலத்திலும் அதுவும் மனயிச்சை குறிப்பாக உணரப்படுகின்ற வயதில் இன்னொரு விவாகத்தை நினைத்தும் பார்க்கவில்லை. மூர் சாஹிப் வரலாற்றுச் சம்பவங்களை எப்போதும் அறியாதவர் அல்ல. மக்காவாசிகள் அன்னாரது தப்லீக் முயற்சிகளால் கஷ்டத்திற்குள்ளாகி தமது சமூகத்தின் மார்க்கத்தை அழிக்க நினைப்பவராகக் கருதி அன்னாரிடம் உத்பா பின் ரபீஆவை தூது அனுப்பினார்கள். அன்னாரிடம் அவர் மூலம் விண்ணப்பித்தார்கள்.

நீங்கள் உங்கள் முயற்சிகளை விட்டு விட வேண்டும். செல்வம் மற்றும் தலைமை தருகிறேன் என்றும் இன்னொரு விண்ணப்பமும் வைத்தார்கள். நீங்கள் நல்ல சிறந்த இளம்பெண்ணை திருமணம் செய்து மகிழ்ச்சி அடையலாம். எமது மார்க்கத்தை மட்டும் குறை கூற வேண்டாம். இந்த புதிய மார்க்கத்தை பிரச்சாரம் செய்யவும் வேண்டாம். அன்னார் இளம் பெண்ணை விரும்பினால் அவர்கள் திருமணம் செய்து தருவார்கள்.

அப்போது அன்னாரின் வயதும் கூட அதிகம் அல்ல. உடல் சக்தியும் கூட பிற்காலத்தை விட நன்றாகவே இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்காவின் தலைவர்களின் பிரதிநிதிகளுக்கு கொடுத்த பதிலும் படித்துப் பார்க்கத் தக்க வகையில் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்:

அந்த வரலாற்றுச் சம்பவம் மூர் சாஹிபின் பார்வையிலிருந்து தப்பியிருக்க வேண்டிய அவசியமில்லை. மக்கத்து மக்கள் அன்னாரின் வருகைக்கு முன் அதாவது அன்னாரது 40 வயது வரை ஒரு நல்லொழுக்கமுள்ள மனிதராகவே அன்னாரைக் கண்டார்கள். ஆனால் இந்த சாட்சியங்கள் இருந்தும் மூர் சாஹிப் 55 வயதுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உடல் சக்திகள் இயல்பாகவே அதிகமாக வெளிப்பட்டது என்றும் அன்னாரது பணிகளும் பொறுப்புகளும் அதிகமாகி இருந்த நிலையிலும் பணியில் மூழ்கியிருக்கும் ஒருவருக்கு கூட அவை வெட்கத்தை ஏற்படுத்தும் என்றாலும் உல்லாசத்தில் மூழ்கி விட்டார் என்று எழுதுவது அவரது ஒருதலைப்பட்சமற்ற குறிப்பாகக் கருத முடியாது. நிச்சயமாக

ஒருதலைப்பட்சத்தால் நிறைந்த கருத்தாகும். கூறுபவர் எதை வேண்டுமானாலும் கூறலாம். அவர்களது நாவையும் பேனாவையும் தடுக்க மற்றவருக்கு சக்தியில்லை.

ஆனால் அறிவுள்ள மனிதர் குறைந்தபட்சம் பிறரது தூய அறிவு ஒப்புக் கொள்ளாத விஷயத்தை இவ்வாறு கூறக்கூடாது. மூர் சாஹிப் மற்றும் அவரைப் போன்ற சிந்தனையுள்ளவர்கள் தமது கண்களின் திரையை அகற்றி விட்டு பார்த்தால் தெரிய வரும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திருமணங்கள் வயது முதிர்ந்த நிலையில் செய்தவையாகும். அவை உடல் தேவையின் கீழ் செய்யப்படாமைக்கு இது ஆதாரமாகும். மாறாக அதற்கு வேறு காரணங்கள் மறைவாக இருந்தன. குறிப்பாக வரலாற்று உண்மையாவது, அன்னார் தமது சிறிய வயதை எத்தகைய நிலைமையில் கழித்தார்கள் என்றால் தம்மவர் மற்றும் அந்நியர் மத்தியில் நம்பத்தகுந்தவர் (அமீன்) என்ற பட்டம் பெற்றார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் சாஹிப் எழுதுகிறார்கள்: படித்தவர்கள் மற்றும் வரலாறு அறிந்தவர்களுக்கு நிச்சயமாக இந்த உணர்வு இருக்கும். இதனை படிப்பதால் எனக்கு ஓர் ஆன்மீக பயன் கிடைக்கிறது. அவர்கள் திருமணங்கள் செய்த காலம் நுபுவ்வத்தின் மிக அதிகமான பொறுப்புகள் நிறைந்த காலமாக இருந்தது. தமது அளவற்ற பொறுப்புகளை நிறைவேற்றுவதில் முழுமையாக மூழ்கி இருந்தார்கள். நீதியை விரும்பும் மனிதனின் பார்வையில் இக்காட்சியே ஓர் ஆதாரமாகும்.

அன்னாரின் திருமணங்கள் நுபுவ்வத்தின் கடமையின் ஒரு பகுதியாக இருந்தன. அன்னார் தமது சுய மகிழ்ச்சியை அழித்து விட்டு தப்லீக் மற்றும் மார்க்கப் பயிற்சியின் நோக்கத்தின் கீழ் இருந்தார்கள். ஒரு தீய மனிதன் பிறரது செயல்களுக்கும் தீய நோக்கம் கற்பிக்கிறார். தமது தீய நிலையின் காரணமாக பல நேரங்களில் நல்ல நிய்யத்தை புரிய முடிவதில்லை. ஆனால் கண்ணியமிக்க மனிதன் இதனை அறிகிறான்; உணர்கிறான். பல நேரங்களில் ஒரே செயலை ஒரு தீய மனிதன் தறவான எண்ணம் கொள்கிறான். அதனை ஒரு நல்ல மனிதன் தூய எண்ணத்துடன் பார்க்கிறான்.

மேலும் இவ்விஷயம் தெளிவுபட வேண்டும். அதாவது இஸ்லாத்தின் திருமணத்தின் நோக்கம் ஆணும் பெண்ணும் தமது மன இச்சைக்கான ஒன்றுகூடுவதற்கல்ல. மாறாக மனித இனம் நிலைப்பதற்காக ஆணும் பெண்ணும் கூடுவது திருமணத்தின் அனுமதிக்கப்பட்ட ஒரு நோக்கமாகும். ஆனால் அதிலும் பல்வேறு தூய நோக்கங்கள் வைக்கப்பட்டுள்ள.

ஆகவே ஒரு மனிதன் திருமணத்தைக் காரணம் காட்டி அவனது ஒவ்வொரு அசைவும் அமைதியும் தன்னலமற்று தூய்மைக்கு ஆதாரமாக இருக்கும்போது அசுத்தமானவர்களைப் போன்று தீய எண்ணத்தின் பக்கம் செல்வது அத்தூய மனிதருக்கு எந்த நஷ்டத்தை ஏற்படுத்தாது. ஒருவரைப் பற்றி ஒரு கருத்து வைக்கப்படுகிறது. ஆனால் கருத்தை வைப்பவர் தனது உட்புறத்தை நன்றாக அறிய முடியும். ஆகவே இதற்கும் அதிகமான ஆட்சேபனைகளுக்கு மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் பதிலாக எழுதியுள்ளார்கள். நான் எதுவும் கூறமாட்டேன். عَلٰى مَا تَصِفُوْنَ وَاللّٰهُ الْمُسْتَعَانُ அல்லாஹ்விடமே இவர்கள் கூறுவதற்கு எதிரில் உதவி கேட்க முடியும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 549–555)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு நிகாஹ் குத்பாவில் ஒரு கருத்தைக் கூறியுள்ளார்கள். திருமண நிகழ்ச்சிகளில் அதனை நான் படிக்கின்றேன். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மாமி மகளை ஸைதுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்திகாரா (நன்மையை நாடி) வேண்டாமல் அதனை செய்திருப்பார்கள் என்று நாம் கூறமாட்டோம். துஆ செய்திருக்க மாட்டார்கள். அல்லாஹ்விடம் பொறுப்பு சாட்டாமல் இருந்திருப்பார்கள் என்று கூறமாட்டோம். இவை அனைத்தையும் அன்னார் செய்திருப்பார்கள். அன்னார் இஸ்திகாரா செய்திருப்பார்கள். துஆ செய்திருப்பார்கள். இருந்தும் அல்லாஹ் அன்னாரின் முயற்சியை வெற்றியாக்கவில்லை.

அன்னார் எழுதுகிறார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், அல்லாஹ் ஒரு விஷயத்தை மக்களிடம் வெளிப்படுத்த விரும்பினான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இயற்கைச் சட்டத்தின் படியும் நாட்டு சட்டதிட்டத்தின்படியும் உரிய ஆண் சந்ததி இருக்கவில்லை. குழந்தைகளை தத்து எடுக்கிறார்கள். ஸைதைப் போன்று நாட்டின் சட்டப்படி அது செய்யப்படுகிறது. மக்கள் அவரை முஹம்மதின் மகன் என்று கூறினர்.

ஸைனபின் நிகாஹ் சந்தர்ப்பத்திலிருந்து தெரிய வருவதாவது, அல்லாஹ் கூறியுள்ளான். உங்களது சொந்த மகனே உங்களுக்குரிய மகனாவார். தத்தெடுத்த குழந்தைகள் உண்மையான குழந்தைகள் அல்ல. உண்மையான சந்திகளுக்கு ஷரீஅத் வைத்துள்ள சட்டங்கள் மற்றவர்களை உண்மையின் பக்கம் திருப்புகிறது.

இதனை தெளிவுடுத்த ஒரே வழிமுறை ஹஸ்ரத் ஸைதால் தலாக் செய்யப்பட்ட பெண்ணை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் திருமணம் செய்வதுதான். அல்லாஹ் ஸைதுக்கும் அவரது மனைவிக்கும் இடையிலுள்ள பிளவை அகற்றவில்லை. அல்லாஹ் நாடினால் அகற்றியிருக்கலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்திகாரா செய்தும் துஆ செய்தும் அல்லாஹ்விடம் பொறுப்பு விட்டும் முயற்சி செய்தார்கள்.

ஆனால் இறை விருப்பம் ஸைத் மனைவியை தலாக் கொடுக்க வேண்டும் என்றிருந்தது. அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவியாக வேண்டும். அதன் மூலம் நாட்டின் சட்டத்திற்கேற்ப உள்ள சந்ததிகள் இயற்கைச் சட்டத்திற்கேற்ப உள்ள சந்ததிகள் போன்றல்ல. இதுவும் ஒரு மையக்கருத்து என்று காட்டுவதாகும். இந்த ஞானம் திருமணத்தின் பின் இருக்கிறது என்று இது குறித்து அன்னார் கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 3 பக்கம் 390–391)

விடுதலை செய்யப்பட்ட அடிமைகளைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடைமுறையைப் பற்றி சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடைமுறை மக்களின் எண்ணங்களை சீர்திருத்துவதாகும்.

இந்த நோக்கத்திற்காக அன்னார் விடுதலை செய்யப்பட்ட அடிமைகளில் தகுதி உள்ளவர்களின் கண்ணியம் குறித்து மற்றவர்களை விட அதிகமாக கவனம் செலுத்தினார்கள். இந்த வகையில் அன்னார் விடுதலை செய்யப்பட்ட அடிமைகளில் ஸைத் பின் ஹாரிஸா மற்றும் அவரது மகன் உஸாமா பின் ஸைது ஆகியோரை யுத்தக்களங்களில் அமீராக நியமித்தார்கள். பெரும் பெரும் கண்ணியமான கம்பீரமிக்க சஹாபிகளை அவர்களின் கீழ் செயல்பட வைத்தார்கள். அறியாதவர்கள் தமது பழங்கால எண்ணத்தின்படி இதனை ஆட்சேபனை செய்தனர்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் உஸாமாவை அமீர் ஆக்கியதற்காக ஆட்சேபனை செய்கிறீர்கள். இதற்கு முன் இவரது தந்தைக்கு தலைமை வழங்கப்பட்டபோதும் பழித்துள்ளீர்கள். ஆனால்

இறைவன் மீது ஆணையாக! எவ்வாறு ஸைத் தலைமைக்கு தகுதி வாய்ந்தவராக இருந்தாரோ எனது அன்புக்குரியவராக இருந்தாரோ அதுபோன்று உஸாமாவும் அதற்குத் தகுந்தவர். எனது அன்புக்குரியவர்களுள் ஒருவர் ஆவார்.

இந்த வழிகாட்டல் இஸ்லாத்தில் உண்மையான சமத்துவத்தைப் பெற்றது. சஹாபாக்களின் கழுத்துகள் குனிந்தன. அவர்கள் புரிந்தனர். இஸ்லாத்தில் ஒருவர் அடிமையாகவோ அடிமையின் மகனாகவோ இருப்பது வெளிப்படையில் அவரை கீழாக மதிக்கவோ, முன்னேற்றம் தருவதிலிருந்து வெளியேற்றுவதற்கோ உரிய விஷயம் அல்ல. எவரும் தடுக்க முடியாது. அசல் படித்தரம் தக்வா மற்றும் சுய தகுதியைச் சார்ந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 683)

மேலும் இதனை விட மேலாக இவ்வாறு இருக்கலாம். அன்னார் தமது மாமி மகள் ஸைனப் பின் ஜஹ்ஷை திருமணம் செய்து கொடுத்தார்கள். வியத்தகு அற்புதம் என்னவெனில் முழு குர்ஆனிலும் ஸைத் பின் ஹாரிஸாவைத் தவிர வேறு எந்த சஹாபியின் பெயரும் குறிப்பிடப்படவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 398–399)

அடிமைத்தனத்திற்கு இஸ்லாமிய வழிமுறையின்படி கிடைக்கும் சுதந்திரம் பற்றி அன்னார் மேலும் எழுதுகிறார்கள்: இஸ்லாமிய வழிமுறையின்படி சுதந்திரம் பெறுபவர்களில் பெரும் எண்ணிக்கையினர் எல்லா தளத்திலும் முன்னேறி உயர்ந்த நிலை வரை சென்றடைந்ததைப் பார்க்க முடிகிறது. பல்வேறு துறைகளில் முஸ்லிம்களிடம் தலைமைத்தனம் பெற்றார்கள். சஹாபாக்களில் ஸைத் பின் ஹாரிஸா ஒரு விடுதலை செய்யப்பட்ட அடிமை ஆவார். அவர் தம்மிடம் தகுதியை உருவாக்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது தகுதியினால் இஸ்லாமிய படைகளுக்கு தளபதியாக நியமித்தார்கள். பெரும் பெரும் கண்ணியமிக்க தலைவர்களை காலித் பின் வலீது போன்ற வெற்றிமிக்க ஜெர்னல்களைக் கூட அவர்களின் கீழ் நிறுத்தினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 403)

ஹஸ்ரத் ஸைத், பத்ர், உஹது, அகழ், ஹுதைபிய்யா, கைபர் ஆகியவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். ஹஸ்ரத் ஸைத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திறமைமிக்க அம்பு எய்பவர்களில் ஒருவராக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷஅபான் மாதம் நடந்த முரைஸி போருக்கு சென்றபோது (இது பனூ முஸ்தலிக்கின் இரண்டாவது பெயராகும்) ஸைதை மதீனாவின் அமீராக நியமித்து விட்டுச் சென்றார்கள்.

ஹஸ்ரத் ஸலமி பின் அக்கு அறிவிக்கிறார்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நான் ஏழு போர்களில் பங்கு பெற்றேன். ராயாவில் பங்கெடுத்தேன். அவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேரடியாக பங்கு பெறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பங்கெடுக்காத யுத்தங்களில் ஸைத் பின் ஹாரிஸாவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு அமீராக நியமித்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போது எந்த போருக்கு ஸைதை அனுப்பினாலும் அமீராகவே அனுப்பினார்கள். பிறகும் கூட ஸைத் உயிருடன் இருக்கும் வரை அவரை அமீராகவே நியமித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 33 ஸைது பின் ஹாரிஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துல் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 377,278 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் எழுதுகிறார்கள்:

ஸப்வான் போர், முதல் பத்ர் என்று அழைக்கப்பட்ட போர். ஹிஜ்ரி 2 –ஆம் ஆண்டு ஜமாத்துல் ஆகிர் மாதம் நடந்தபோது அது குறித்து கூறுகிறார்கள்: அஷீரா போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பினார்கள். 10 நாள்கள் கூட ஆகியிருக்காது. மக்காவின் ஒரு பிரமுகர் ஸைன் ஜாபிர் ஃபஹ்ரி என்பவர் குறைஷிகளின் கூட்டத்துடன் முழுமையான எச்சரிக்கையுடன் மதீனாவின் சுரகாஹ் என்ற இடத்திற்கு வந்தார். அது ஊரிலிருந்து 3 மைல் தூரத்தில் இருந்தது. திடீரென்று தாக்கினர். முஸ்லிம்களின் ஒட்டகம் முதலியவற்றை திருடிக் கொண்டு சென்றார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனே ஸைத் பின் ஹாரிஸாவை தனக்குப் பின் அமீராக இருக்குமாறு நியமித்து விட்டு முஹாஜிர்களைக் கொண்ட படையுடன் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். சஃப்வான் என்ற பத்ருக்கு அருகிலுள்ள ஓரிடம் வரை சென்றார்கள். அவன் தப்பி ஓடி விட்டான். இந்தப் போரை முதல் பத்ர் என்றும் கூறப்படுகிறது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 330)

இதனைக் குறித்து முதலில் கூறவும் செய்தேன்.

அஷீரா போர் பற்றி சிறிது கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குறைஷிகளின் தீய எண்ணம் பற்றி தெரிய வந்தபோது, அன்னார் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். கடற்கரை வழியாக அஷீரா வரை சென்றார்கள். குறைஷிகளுடன் அங்கு சண்டை நடைபெறவில்லை. ஆனால் பனூ முத்லஜ் கோத்திரத்துடன் சில நிபந்தனைகளுடன் ஒருவருக்கொருவர் பாதுகாப்பு தர வேண்டும் என்று ஒப்பந்தம் செய்தார்கள்.

பிறகு மதீனா புறப்பட்டார்கள். அஷீரா கடற்கரை ஓரத்தில் இருந்தது. அங்கு சென்றபோது காஃபிர்கள் அங்கு ஒன்று கூடுவதாக செய்தி கிடைத்தது. ஒருவேளை படைகள் ஒன்று சேர்திருக்கலாம். அவர்கள் வெளியில் வந்தால் எதிர் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். ஆனால் சண்டை நடைபெறவில்லை. அந்தப் பயணத்தின் பயன் ஒரு கோத்திரத்துடன் அமைதிக்கான ஒப்பந்தம் போடப்பட்டது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 329)

கஸ்வா (போர்) மற்றும் சர்யா (போர்) இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறுகிறேன். கஸ்வா பற்றி கூறுகிறேன். சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். எந்த குழுவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேரடியாக கலந்து கொண்டார்களோ அது கஸ்வா என்று அழைக்கப்பட்டது. அன்னார் பங்கெடுக்காத போர் சர்யா அல்லது சர்யா என்று அழைக்கப்பட்டன. கஸ்வா, சர்யா இரண்டையும் குறித்து தெளிவுபட வேண்டிய விஷயமாவது,

வாளேந்தி யுத்தம் செய்ய வெளிப்படுவது அவசியமில்லை. யுத்த சூழலில் நடக்கும் பயணங்கள் அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலந்து கொண்டதால் அது கஸ்வா என்று அழைக்கப்பட்டது. குறிப்பாக சண்டையிட செல்லாமல் கட்டாய சூழ்நிலையால் சண்டையிட வேண்டியது ஏற்பட்டாலும் சரியே. அதுபோன்று சரியா என்றாலும் அவ்வாறுதான். ஆகவே ஒவ்வொரு கஸ்வா மற்றும் சர்வா ஆகியவை சண்டைக்காகவே செல்வதில்லை. அஷூரா போரும் அவ்வாறு தான். அங்கு சண்டை நடக்கவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 327)

பத்ரிலிருந்து புறப்படும்போது பத்ர் முடிந்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைத் பின் ஹாரிஸாவை மதீனாவுக்கு அனுப்பினார்கள். அவர் முன்னே சென்று மதீனாவாசிகளிடம் வெற்றிச் செய்தியைச் சென்று சேர்க்குமாறு கூறினார்கள்.

இந்த வகையில் ஸைத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் மதீனா சென்று மதீனாவாசிகளிடம் வெற்றிச் செய்தியைக் கூறினார்கள். மதீனத்து சஹாபிகளுக்கு ஒருபுறம் இஸ்லாத்திற்கு கிடைத்த வெற்றி குறித்து மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அந்த மகத்தான யுத்தத்தில் தாம் கலந்து கொள்ள முடியாமல் போனது குறித்த கைசேதமும் இருந்தது. நற்செய்தி ஒரு கவலையைப் போக்கி விட்டது. அந்த கவலையாவது ஸைத் பின் ஹாரிஸா வருவதற்கு சற்று முன்பு முஸ்லிம்களுக்கு பொதுவாகவும் ஹஸ்ரத் உஸ்மானுக்கு குறிப்பாகவும், ருக்யா பின்த், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மரணத்தால் கவலை ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை நோயின் காரணமாக அங்கேயே விட்டு விட்டு சென்றார்கள். அதனால் அந்த யுத்தத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலந்து கொள்ள முடியவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 367)

ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா உடைய ஒரு சரியா ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு ஜமாத்தில் ஆகிர் மாதம் குர்தாஹ் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டது.

அது பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்:

பனூ சுலைம் மற்றும் பனூ கத்ஃபான் ஆகியோரின் தாக்குதலிலிருந்து விடுதலை கிடைத்தாலும் முஸ்லிம்களுக்கு இன்னொரு ஆபத்தை தடுத்து நிறுத்துவதற்காக நாட்டிலிருந்து புறப்பட வேண்டியது ஏற்பட்டது. இதுவரை குறைஷிகளின் தமது வடக்கத்திய பயணத்திற்காக ஹிஜாஸியின் கடற்கரை ஓரமாக சிரியா சென்றிருந்தனர். ஆனால் அவர்கள் அவ்வழியை விட்டு விட்டார்கள். காரணம் அப்பகுதியில் இருந்த கோத்திரத்தினர் முஸ்லிம்களுக்கு நட்பு கோத்திரமாகி விட்டனர். குறைஷிகளுக்கு விஷமம் செய்ய வாய்ப்பு குறைந்து விட்டது.

ஆனால் குறைஷிகள் கடற்கரை வழியை தமக்கு ஆபத்தாகக் கருதினர். எனவே அவர்கள் அவ்வழியை விட்டு விட்டு நஜ்து வழியாக செல்ல விரும்பினர். அது ஈராக்கிற்கு சென்றது. அதற்கு அருகில் குறைஷிகளில் நட்பு கோத்திரம் மற்றும் முஸ்லிம்களின் உயிர் பகைவர்கள் இருந்தனர். முதல் வழியில் முஸ்லிம்களுடன் ஒப்பந்தமிட்டவர்கள் மறுபுறம் குறைஷிகளுடன் ஒப்பந்தமிட்டவர்களும் முஸ்லிம்களிடம் உயிர்ப்பகைவர்களும் இருந்தனர். அவர்கள் சுலைம் மற்றும் கத்ஃபான் ஆவர். இவ்வகையில் ஜமாத்தில் ஆகிர் மாதம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்தது. குறைஷிகளின் ஒரு வணிகக்குழு நஜ்த் வழியில் கடந்து செல்லவுள்ளார்கள் என்பது அந்த செய்தி. வெளிப்படையில் குறைஷிகள் கடற்கரை வழியில் கடந்து செல்வது அவர்களின் நட்புக் கோத்திரம் இருக்கிற வழியில் செல்வது முஸ்லிம்களுக்கு ஆபத்தாகும். நஜ்தி வழியில் செல்வது அதனை விட ஆபத்தாகும். ஏனெனில் கடற்கரை வழியைப் போல் அல்லாமல் இந்த வழியில் குறைஷியின் நட்பு கோத்திரம் இருந்தது. இவர்களுக்கு குறைஷிகளைப் போன்றே முஸ்லிம்கள் மீது இரத்த தாகம் கொண்டவர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டு குறைஷி எளிதாக மதீனாவுக்குள் தாக்குதல் நடத்த முடியும் அல்லது விஷமம் செய்ய முடியும்.

பிறகு குறைஷிகளைப் பலவீனப்படுத்தவும் சமாதானம் பற்றி கவனம் திருப்புவதைக் காரணம் காட்டி இந்த வழியிலிருந்து தடுப்பது அவசியமாக இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்தி கிடைத்ததும் விடுதலை செய்யப்பட்ட அடிமையாகிய ஸைத் பின் ஹாரிஸாவை தலைவராக்கி தமது சஹாபாக்களின் ஒரு படையை அனுப்பினார்கள்.

குறைஷிகளின் ஒரு வணிகக் குழுவில் அபூ சுப்யான் பின் ஹரப் மற்றும் சஃப்வான் பின் உமையா போன்ற தலைவர்களும் இருந்தனர். ஸைத் மிகவும் சுறுசுறுப்புடனும் எச்சரிக்கையுடனும் தமது கடமையை நிறைவேற்றினார். நஜதின் குர்தாஹ்வில் அந்த இஸ்லாமிய எதிரிகளை சென்று பிடித்தார். திடீர் தாக்குதலால் பயந்து குறைஷிகள் தமது குழுவின் பொருள்களை விட்டு விட்டு ஓடி விட்டனர். ஸைத் பின் ஹாரிஸா மற்றும் அவருடன் இருந்தவர்கள் பெரும் போர் செல்வங்களுடன் வெற்றியுடன் திரும்பினர்.

சில வரலாற்றாசிரியர்கள் எழுதுகிறார்கள்: குறைஷிகளின் அந்தக் குழுவிலிருந்த வழிகாட்டியான பராயத் என்ற பெயருள்ள மனிதர் முஸ்லிம்களிடம் கைதானார். பிறகு முஸ்லிம் ஆனதால் விடுதலை செய்யப்பட்டார். மற்ற அறிவிப்பின்படி முஸ்லிம்களுக்கு எதிரில் இணைவைப்போர் ஒரு துப்பு அறிபவரை அனுப்பினார். ஆனால் அவர் முஸ்லிமாகி மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்து விட்டார்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 465–466)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா மதீனா திரும்பி வரும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என் வீட்டில் இருந்தார்கள். ஸைத் வந்தார். கதவைத் தட்டினார். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரவேற்றார்கள். அவரது கன்னம் தழுவினார்கள். முத்தமிட்டார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் இஸ்தஃஸான்.... ஹதீஸ் எண் 2732)

சில அறிவிப்புகளின்படி ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ஷஅபான் மாதம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக்கிடம் செல்லுமாறு அறிவுறுத்திய போது அன்னார் ஸைத் பின் ஹாரிஸாவை மதீனாவின் அமீராக நியமித்தார்கள் என்று வந்துள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 558)

அகழ் போரின்போது முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸாவிடம் இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 1 பக்கம் 51 பாப் கஸ்வா ரஸூலுல்லாஹி (ஸல்) அல் ஹந்தக் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த குறிப்பு இன்னும் சற்று செல்லும்.

இரண்டாவது நான் கூற விரும்புவது ஒரு வருத்தத்திற்குரிய செய்தியாகும். (ஜனாஸா வந்து விட்டதா?) அன்பிற்குரிய மர்யம்

ஸல்மான் குல் சாஹிபா. இவர் முபாரக் அஹ்மது சித்தீக் சாஹிபின் மகள். ஜுன் 17 ஆம் தேதி அன்று தமது 25 –வது வயதில் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

சில நாட்களுக்கு முன் இவரது நோய் தெரிய வந்தது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மிக அதிகமாக நோய் ஏற்பட்டிருந்ததால் அல்லாஹ்வின் நியதி முந்தியது. உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அன்புக்குரிய இந்த இளம்பெண் குறித்து சந்திப்பவர்களெல்லாம் கூறுவார்கள். மிகவும் எளியவர். நல்லொழுக்கமுள்ளவர். தொழுகையில் பேணுதல் உள்ளவர். அனுதாபம் மற்றும் சேவை உணர்வு உள்ளவர். கிலாஃபத்துடன் மிகுந்த தொடர்புள்ளவர். மர்ஹூமா பெற்றோர், கணவர் தவிர தமது நினைவாக நாயாப், ஸர்யாப் என்ற பெயர் கொண்ட இரண்டு மகள்களையும் முறையே 5 மற்றும் ஒன்றரை வயது குழந்தைகளை விட்டுச் சென்றுள்ளார்.

மர்யம் ஸல்மான் சாஹிபாவின் தாயார் குல்முபாரக் சாஹிபா கூறுகிறார்: கடந்த ஆறு வாரங்களில் 3 கஷ்டங்கள் ஏற்பட்டு விட்டன. ஒன்று முபாரக் குல் உடைய ஒரு சகோதரர் இறந்து விட்டார். பிறகு சகோதரி இறந்தார். இது கடந்த மே மாதம் நடந்தது. இப்போது எனது மகள் அல்லாஹ்வுக்கு பிரியமானவராகி விட்டார்.

அல்லாஹ் பொறுமை மற்றும் தைரியம் வழங்குவானாக. மர்யம் ஸல்மான் சாஹிபா தமது ஜமாஅத்தின் புதிதாக பைஅத் செய்த பெண்களின் செயலராக இருந்தார். மிகவும் இனிய சுபாவம். சிரித்த முகம். தகுதியுள்ளவருக்கு தொடர்ந்து உதவி செய்வார்.

அந்தப் பகுதியின் சத்ர் லஜ்னா கூறுகிறார்: அன்புக்குரிய மர்யம் ஸல்மான் புதிதாக பைஅத் செய்த பெண்களின் செயலராக இருந்தார். முன்னுதாரணமான பணி செய்தார். புதிதாக பைஅத் செய்யும் பெண்களிடம் நல்ல அன்புடன் பழகுவார். அதனால் புதிதாக பைஅத் செய்யும் பெண்களுக்கு தன்னாலேயே ஜமாஅத் மீது அன்பு வந்து விடும்.

ஓர் அஹ்மதி பெண் பரிதா நெல்ஸின் கூறுகிறார்: எனக்கு நினைவு உள்ளது. நான் முதன் முதலில் கூட்டத்திற்கு வரும்போது எனக்கு கவலை ஏற்பட்டது. நான் என்னை ஒரு தனி பெண்ணாகக் கருதினேன். என்னைப் பார்த்தவுடன் முகத்தின் புன்முறுவலுடன் அருகில் அமர்ந்தார். இவர் எப்போதும் என்னுடன் அமர்வார். பிறகு வீட்டிற்கு எனக்காக சாக்லேட் அன்பளிப்பு எடுத்து வருவார். ஜமாஅத் மற்றும் கிலாஃபத் பற்றி எனக்கு எடுத்துக் கூறினார்.

அதுபோன்று இன்னொரு புதிய அஹ்மதியான அன்தலிப் கூறுகிறார்: எனது கருத்தின்படி ஒரு செகரட்டரி முபாயிதா (புதிதாக பைஅத் செய்யும் பெண்களின செயலர்) மர்யம் ஸல்மான் போன்று இருக்க வேண்டும். ஏனெனில் எனக்கு நினைவு உண்டு. முதல் சந்திப்பு எனக்கு அவருடன் நடந்தபோது எவ்வளவு அன்புடன் எனது கன்னம் தழுவினார். எனக்கு ஓர் அன்புக்குரிய சகோதரி கிடைத்து விட்டாள் என்ற எண்ணம் ஏற்பட்டது. என் வீட்டில் எனது குழந்தைகள் சிறு சிறு எதிர்ப்புகள் காட்டுவர். அப்போது என்னிடம் போன் மூலமாக எப்போதும் என்னுடன் தொடர்பு கொள்வார். தோழிகளிடமும் மக்களிடமும் பேச்சுக்குப் பேச்சு கிலாஃபத் மற்றும் ஜமாஅத் பற்றி கூறுவார். புதிய அஹ்மதிகளுக்கு மிகச் சிறந்த தோழியாக இருந்தார். உதவி செய்வார். அவரால் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கான ஆர்வம் ஏற்பட்டது.

இப்போது ஒரு புதிதாக பைஅத் செய்த ஒரு பெண் கூறுகிறார்: அவரது தர்பிய்யத்தால்தான் நான் என் வட்டத்தின் ஜெனரல் செகரட்டரி ஆக உள்ளேன். சாதாரண கைச்செலவு பணத்தில் மிச்சப்படுத்தி படைப்பின சேவை செய்து வந்தார்.

மர்யமின் தந்தையார் முபாரக் சித்தீக் எழுதுகிறார்: மிகவும் முறையாக குத்பா கேட்பார். எல்லா பணியிலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவார். மரணமடைய இரண்டு நாட்களுக்கு முன் மஜ்லிஸே சூரா இருந்தது. மர்யம் அவசரப் பிரிவில் இருந்தார். சூராவுக்குச் செல்வதிலிருந்து கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக அனுமதி வாங்கிக் கொள்கிறேன் என்று நான் கூறினேன்.

மர்யம் கூறினாள்: வேண்டாம். நீங்கள் கவலைப்படாதீர்கள். எனக்காக ஜமாஅத் நிகழ்ச்சியை விட வேண்டாம். சூராவில் கலந்து கொள்ளுங்கள். ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற இந்த வாக்குறுதியை வாங்கியுள்ளார்கள்.

இவர் ஆங்கில நஸ்ம் எழுதியுள்ளார். ஓர் ஆங்கில நஸ்மின் பொருள். எந்த நற்செயல் செய்தாலும் நிறைய பிரச்சனைகள் வரும். உங்களின் களங்கமற்ற தன்மையை சந்தேகம் கொள்வர். மக்களை அவர்கள் வேலையைச் செய்ய விடுங்கள். நீங்கள் உங்கள் பணியைச் செய்து கொண்டே செல்லுங்கள். இதுபோன்று அவர் கிலாஃபத் பற்றியும் உருது நஸ்ம் இயற்றியுள்ளார்.

சென்ட் ஜார் என்ற இலண்டன் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்குள்ள நர்ஸ் ஜெர்மன் பெண் ஆவார். அவர் கூறுகிறார்: மர்யமிடம் பேசிப் பார்த்தால் ஒரு மலக்கை சந்திப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. கோடையில் கடும் வெப்பம் ஏற்படும்போது அவர் தமது பிரிட்ஜிலிருந்து தண்ணீர் பாட்டில்களை வைப்பார். விடுமுறை நாட்களில் வெளியில் குழந்தைகளுடன் அமர்ந்து மக்களுக்கு தண்ணீர் புகட்டுவேன். தண்ணீர் இலவசம்; எடுத்துச் செல்லுங்கள் என்று எழுதி வைத்து விடுவார்.

எழுதுகிறார்: குழந்தைகளுக்கு ஒரு வாரம் விடுமுறை. வாரம் முழுவதும் இவ்வாறுதான் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக ஸ்டால் போட வேண்டும் என்பார்.

ஒரு ஆங்கிலேயர் கூறினார்: மகிழ்ச்சிக்காகவும் நிம்மதிக்காகவும் குழந்தைகளுக்கு ஆயிரக்கணக்கான பவுண்டுகள் எடுத்துச் செல்கிறார்கள். ஆனால் நிம்மதி கிடைப்பதில்லை. அசல் மகிழ்ச்சி இவ்வாறு வீட்டிலிருந்தே பெற முடிகிறது. மக்களுக்கு தொண்டாற்ற முடிகிறது.

முதலில் சலாம் சொல்வதற்கு முந்திக் கொள்வார். மக்களை நலம் விசாரிப்பார். ஒருவருடன் நட்பு இருந்தால் அல்லது வட்டாரத்தில் உள்ளவர்களிடம் சில நாள் பார்க்கா விட்டால் மெஸேஜ் செய்து விசாரிப்பார். மற்றவரிடம் நல்ல விஷயங்களைப் பார்த்து பாராட்டுவார். எப்போதும் முகத்தில் புன்னகை இருக்கும். அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பார். ஒவ்வொரு நிம்மதிக்கும் மிகவும் நன்றி கூறும் பெண்ணாக இருந்தார்.

அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக. மன்னிப்பின் நடைமுறையைக் காட்டுவானாக. அந்தப் பெண் நம்பியது போன்று அல்லாஹ் அவரிடம் அன்பு காட்டுவானாக. தமது அன்பின் அரவணைப்பில் எடுத்துக் கொள்வானாக. அவரது தகுதியை உயர்த்துவானாக. அவரது பெற்றோருக்கு பொறுமையும் தைரியமும் வழங்குவானாக. அல்லாஹ்வின் திருப்தியின் மீது முழுமையாக திருப்தி கொள்வார்களாக. அவரது மகள்களுக்கு முன்மாதிரியாக இருந்து பராமரிப்பார்களாக. உதவி செய்வார்களாக. அவரது கணவருக்கும், மகள்களுக்கும் பெற்றோருக்கும் அன்பு காட்டுபவர்களாக ஆவார்களாக. அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக.

ஜுமுஆவுக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் ஜனாஸா தொழுகை நடத்துவேன். எல்லாரும் கலந்து கொள்ளுங்கள். நான் வெளியில் சென்று தொழுவேன். நீங்கள் இங்கே உள்ளேயே நின்று கலந்து கொள்ளுங்கள்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் காலத்தின் தேவை மற்றும் வானின் உதவியில் ஒளியில்

மவ்லவி மன்ஸூர் அஹ்மது சாஹிப் (ஆசிரியர், பத்ர் வாரப் பத்திரிகை, உருது இதழ்)

(தமிழாக்கம்: மவ்லவி N. ஜிஹாவுல் ஹக்)

மதிப்பிற்குரிய அவை தலைவர் அவர்களே! பெரும் மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ

தாங்கள் செவிமடுத்தது போன்று எனது சொற்பொழிவின் தலைப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்தவம் காலத்தின் தேவை மற்றும் வானின் உதவியின் ஒளியில் என்பதாகும்.

நான் எனது சொற்பொழிவின் முதல் பகுதியாகிய காலத்தின் தேவை தொடர்பாக சுருக்கமாக சிலவற்றை கூறுகிறேன்.

சகோதரர்களே! பதினான்காம் நூற்றாண்டின் காலகட்டம் இஸ்லாத்திற்கு துன்பம் துயரத்திற்கான காலமாக இருந்தது. இதற்குமுன்பு இதனைப் போன்ற ஒரு காலம் ஒருபோதும் வந்ததில்லை. இரண்டு வகையில் இஸ்லாம் மிகவும் கஷ்டங்களை எதிர்கொண்டது. உட்புறத்தில் முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு மிகவும் தொலைவில் சென்று விட்டனர். இரண்டாவது வெளிப்புறமாக ஏனைய மதங்கள் மிகவும் தீவிரமாக இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

உட்புற கஷ்டங்கள் தொடர்பாக பார்த்தோம் என்றால் முஸ்லிம்களின் செயல் மற்றும் கொள்கைகளின் நிலை முற்றிலுமாக அழிந்து போயிருந்தது. தொழுகை, நோன்பு மற்றும் ஸக்காத்து போன்றவற்றுடன் எவ்வகையிலும் தொடர்பு இல்லாமல் இருந்தது. திருக்குர்ஆன் கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டது. இலட்சக்கணக்கானோர் கலிமா கூட அறியாத நிலையில் இருந்தனர்.

கொள்கையின் நிலையினைப் பற்றி பார்ப்பாமேயானால் அல்லாஹ், அவனது ரஸூல், அவனது மலக்குகள் மற்றும் திருக்குர்ஆன் தொடர்பாக எப்படிப்பட்ட கொள்கைகளை ஏற்படுத்திக் கெண்டனர் என்றால் அது இஸ்லாத்தின் முகத்தை சீர்குலைத்திருந்தது. ஆலிம்கள் இஸ்லாத்தின் அடித்தளத்தை வலுவிழக்கச் செய்வதில் மூழ்கியிருந்தனர். மக்கள் மிருகங்களைப் போன்று இருந்தனர். வசதிபடைத்தோர் ஊதாரிகளாகவும், ஆட்சியாளர்கள் நம்பிக்கை துரோகிகளாகவும் இருந்தனர். முஸ்லிம்களின் சிறப்பம்சமாக இருந்த நல்லொழுக்கம் இன்று அவர்களிடமிருந்து மிகவும் தூரம் சென்று விட்டது. இன்று மக்கள் இஸ்லாத்தில் எந்த விஷயங்களை விட்டுள்ளனர்? என்ற கேள்விக்கு பகரமாக இஸ்லாத்தின் எந்த விஷயம் முஸ்லிம்களிடம் எஞ்சியுள்ளது? என்ற கேள்வி உருவாகியுள்ளது. (தஃவத்துல் அமீர்)

மேலும் வெளிப்படையான கஷ்டங்களை பார்த்தோமென்றால் நாலா புறத்திலிருந்தும் இஸ்லாம் ஆட்சேபனைக்கு உள்ளாயிகிருந்தது. இலட்சக்கணக்கான குற்றச்சாட்டுகள் இஸ்லாத்தின் மீது வைக்கப்படுகின்றது. கோடிக்கணக்கில் இஸ்லாத்திற்கெதிரான புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. முஸ்லிம் நாடுகள் ஒருபுறம் பரஸ்ரம் ஒருவர் மற்றொருவருக்கு எதிராக சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் ஒவ்வொரு நாடும் உட்புற கூச்சல், குழப்பத்தின் உறைவிடமாக உருவெடுத்துள்ளன. மக்கள் அரசாங்கத்திற்கெதிராகவும், அரசு பொது மக்களுக்கு விரோதியாகவும் உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையை தேடக் கூடியவர்களே! இது இஸ்லாத்திற்கு வானின் உதவி அவசியமாக இருந்த காலமாக இல்லையா? தற்போது வரை எந்தெந்த துன்பங்கள் இஸ்லாத்தை பற்றிக் கொண்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியாதா?... எந்தெந்த மக்கள் இஸ்லாத்தை விட்டு விட்டு கிறித்தவத்திற்கு சென்று சேர்ந்துள்ளனர். எந்தளவு நாத்திகராகவும், இயற்கை வணங்கியாகவும் ஆகியுள்ளனர். எந்த அளவு இணை வைத்தலும், பித்அத்தும் ஏகத்துவம் மற்றும் சுன்னத்தின் இடத்தை அபகரித்துள்ளன. எந்த அளவு இஸ்லாத்திற்கு எதிராக நூல்கள் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

ஆக, நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். வெளிப்படையான தாக்குதலுக்கு எதிராக இந்த நூற்றாண்டில் இறைவன் புறமிருந்து ஒருவர் வர வேண்டிய அவசியம் இல்லையா? எந்த அளவு துன்பங்கள் இஸ்லாத்தை நிர்பந்தப்படுத்துகின்றன. எந்த அளவு நாலா புறமிருந்தும் எதிரிகள் இஸ்லாத்தின் மீது அம்புகளை எய்கின்றனர் என்று சற்று பாருங்கள். இந்த அறிவு சார்ந்த, சிந்தனை சார்ந்த, போதனைகள் சார்ந்த, திட்டம் மற்றும் சூழ்ச்சிகள் சார்ந்த, தீமைகள் சார்ந்த, ஆசையூட்டல் சார்ந்த, பிரிவினை மற்றும் நாத்திகம் சார்ந்த, இணை வைத்தல் மற்றும் பித்அத் சார்ந்த இந்த அனைத்து புயல்களையும் கொஞ்சம் கண்களை திறந்து பாருங்கள். மேலும் உங்களால் முடியுமென்றால் இந்த ஒட்டுமொத்த புயல்களுக்கு நிகரான ஒரு நிலை முந்தைய காலத்தில் இருந்து எடுத்துக் காட்டுங்கள். (ஆயினா கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 252)

சகோதரர்களே! மிகவும் அவசியமுள்ள இப்படிப்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் வழிகாட்டுதலுக்காக, அவர்களின் நேர்வழிக்காக இமாம் மஹ்மதி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்ற வேண்டியதிருந்தது. இதனைப் பற்றிய நற்செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: முஸ்லிம்களே! உங்களிடம் மஸீஹ் இப்னு மர்யம் தோன்றும்போது அது உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய தருணமாக இருக்கும்.

அவர் மூலமாக இஸ்லாம் உலகளவில் வெற்றி பெறுவதற்கான செய்தியை அல்லாஹ்வும் அவனது ரஸூலும் இந்த உம்மத்திற்கு வழங்கியுள்ளனர். மேலும் மார்க்க அறிஞர்கள் அனைவரின் ஒன்றுபட்ட கருத்தும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வருவார் என்பதாகும்.

ஆக அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் முன்னறிவிப்பிற்கேற்ப மேலும் மார்க்க அறிஞர்களின் கனவு மற்றும் கஷ்ஃப் காட்சிகளுக்கேற்ப பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிகவும் அவசியமுள்ள காலத்தில் அல்லாஹ் இந்த உம்மத்தின் மீது மிகவும் கருணை காட்டியவாறு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்டட மஸீஹாக அனுப்பினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இஸ்லாமிய கொள்கைகள் கருத்து வேறுபாடுகளினால் நிரம்பி, கருத்து வேறுபாடு இல்லாத

கொள்கைளே இல்லை என்ற நிலைமையில் வெளிப்பட்டுள்ளேன். மேலும் நான் எனது உண்மைத்துவத்திற்கு வேறெதாவது ஆதாரம் கூற வேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால் காலத்தின் தேவையே ஆதாரமாக உள்ளது.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 515)

நான் பூமியில் வாழக்கூடிய அனைவருக்காகவும் அனுப்பப்பட்டுள்ளேள். அவர்கள் ஆசியாவைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; ஐரோப்பா அல்லது அமெரிக்காவைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி.

(தர்யாக்குல் குலூப், ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 515)

மேலும் நான் இக்கால மக்களை என் பக்கம் அழைக்கவில்லை. மாறாக அவர்கள் தான் என்னை தன் பக்கம் அழைத்துள்ளனர்.

(பைகாமே ஸுலுஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 486)

ஆக, நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின் நன்றி செலுத்துங்கள். சஜ்தாக்களில் விழுங்கள். இக்காலத்திற்காக காத்திருந்து உங்களது முன்னோர்கள் கடந்து விட்டனர். எண்ணற்ற உயிர்கள் இதனை அடையும் ஆசையில் பயணம் செய்துள்ளனர். ஆனால் அந்த காலத்தை நீங்கள் அடைந்துள்ளீர்கள்.

ஆக இதற்கு தற்போது கண்ணியமளிப்பதும், கண்ணியமளிக்காமல் இருப்பதும், இதிலிருந்து பயனடைவதும், பயனடையாமல் இருப்பதும் உங்கள் கையில்தான் உள்ளது. மேலும் நான் தான் மார்க்கத்தை புத்தம் புதிதாக உள்ளத்தில் நிலைபெறச் செய்வதற்காக, சரியான நேரத்தில் படைப்பின சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்டுள்ளேன் என்பதை மீண்டும் மீண்டும் கூறுவேன். இதனை வெளிப்படுத்துவதிலிருந்து நான் தவிர்ந்திருக்க மாட்டேன்.

(ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 8)

சகோதரர்களே! நான் தற்போது சொற்பொழிவின் இரண்டாவது பகுதிக்கு வருகின்றேன். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் – விண்ணின் உதவி மற்றும் ஆதரவின் ஒளியில் என்பதன் பக்கம் வருகிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வயது ஏறக்குறைய 40 ஆக இருந்தபோது அல்லாஹ் அன்னாருக்கு أَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ என்ற இல்ஹாமை இறக்கினான். இது விண்ணின் உதவி மற்றும் ஆதரவின் முதல் இல்ஹாமாகும். இதனைத் தொடர்ந்து வரிசையாக உதவி மற்றும் ஆதரவிற்கான இல்ஹாம்கள் இறங்கியவாறு வெற்றிக்கான வாக்குறுதியும் வழங்கப்பட்டது. பின்னர் வாழ்நாள் முழுவதும் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அன்னாருக்கு மாபெரும் உதவி மற்றும் ஆதரவினை வழங்கினான்.

நான் விண்ணின் ஆதரவு தொடர்பாக ஒரு மகத்தான உதவி மற்றும் ஆதரவினை எடுத்துரைக்கின்றேன். அது சூரிய சந்திர கிரகணமாகும். நமது மஹ்தி உண்மையான மஹ்திக்கான வாதம் செய்யும்போது அவரது உண்மைத்துவத்திற்கு ஆதரவாக அல்லாஹ் அவருக்காக சூரிய சந்திர கிரகணத்தை வெளிப்படுத்துவான் என ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்கள்.

சந்திரனுக்கு அதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் முதல் நாளிலும், சூரியனுக்கு அதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் மத்திய நாளிலும் கிரகணம் ஏற்படும் எனக் கூறியிருந்தார்கள்.

சகோதரர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1889 ஆம் ஆண்டு பைஅத் வாங்கத் துவங்கினார்கள். மேலும் ஜமாஅத்திற்கான அடிக்கல்லையும் நாட்டினர்கள். சரியாக ஐந்து வருடத்திறகுப் பிறகு அதாவது 1894 ஆம் ஆண்டு அல்லாஹ் அன்னாரது உண்மைத்துவத்திற்கு ஆதரவாக சூரிய சந்திர கிரகணத்தை வெளிப்படுத்தினான். 1894 ஆம் ஆண்டு இந்த கிரகணம் ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆப்ரிக்கா நாடுகளில் ஏற்பட்டது. அதற்கு அடுத்த வருடம் அதாவது 1895 ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் ஏற்பட்டது.

சகோதரர்களே! மக்கள் அன்றைய நாட்களில் முஸ்லிம்கள் அழிந்து விட்டனர். பதினான்காம் நூற்றாண்டு துவங்கி விட்டது. இமாம் மஹ்தி தோன்றவுள்ளார் எனக் கூறி வந்தனர். ஒவ்வொரு வீட்டிலும் அவரைப் பற்றியே பேசப்பட்டது. இந்த அடையாளம் வெளிப்பட்டதும் நூற்றுக்கணக்கான நல்லடியார்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்தனர். ஒருபுறம் காதியானில் அஹ்மதிகளிடையே மகிழ்ச்சி நிலவியது. மறுபுறம் எதிரிகள் துன்பம் மற்றும் துயரத்தில் வீழ்ந்திருந்தனர். ஆலிம்கள் மிர்ஸா குலாம் அஹ்மது மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதம் செய்து கொண்டு நிற்கிறார். அவருக்காக சூரிய சந்திர கிரகண அடையாளமும் வெளிப்பட்டு உள்ளது என மிகவும் இழிவு மற்றும் அவமானத்திற்கு ஆளாக்கிக் கொண்டிருந்தனர்.

ஒரு நபர் ஒரு மவ்லவியிடம், சூரிய சந்திர கிரகணம் பற்றிய ஹதீஸைப் பற்றி கேட்டார். அதற்கு அந்த மவ்லவி சரியானதுதான். ஆனால் மிர்ஸா சாஹிபின் வலையில் விழ்ந்து விடாதே என்று கூறினார். பகைவர்களாக இருந்த ஆலிம்கள் மக்கள் தற்போது மிர்ஸா சாஹிபை ஏற்றுக் கொண்டு விடுவார்கள் என மிகவும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தனர்.

சகோதரர்களே! பகைவர்களாக இருந்த ஆலிம்களிடம் இந்த ஹதீஸை சந்தேகத்திற்குரிய வட்டத்தில் கொண்டு வந்து அதன் மீது ஆட்சேபனை செய்வதை தவிர வேறு வழியில்லாமல் இருந்தது. அவர்கள் இந்த ஹதீஸை பலவீனமானது எனக் கூறினார்.

அதற்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

மிகப்பெரிய ஹதீஸ் பலவீனமானது என நிரூபித்தால் நாம் அவருக்கு உடனடியாக நூறு ரூபாயை அன்பளிப்பாக தருகின்றோம். அல்லது முன்னதாக யாரிடமாவது அமானிதமாக கொடுத்து வைக்கக் கூறினாலும் அதையும் செய்கிறோம். அவ்வாறு இல்லையென்றால் இறைவனுக்கு அஞ்சுங்கள். என்னைப்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: என் இறைவன் எனக்கு நீதியைக் (கடைப்பிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் வணக்கத்தலம் ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காகக் களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களைத் தோற்றுவித்தது போல் நீங்கள் (அவனிடமே) திரும்புவீர்கள். (7:30)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒரு பிரிவினருக்கு அவன் நேர்வழியினை வழங்கினான். ஆனால் மற்றொரு பிரிவினர்க்கோ தவறான வழியில் செல்லுவது உரித்தாகி விட்டது. (ஏனென்றால்) அவர்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு ஷைத்தான்களைத் தங்கள் நண்பர்களாக்கிக் கொண்டு, தாங்கள் நேர்வழியினைப் பெற்று விட்டோம் என்று நினைத்துக் கொள்கின்றனர். (7:31)

Faizal Hameed Ilahi
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

பொய்ப்படுத்த வேண்டுமென்பதற்காக இறைஞானம் பெற்ற ஆலிம்கள் எழுதிய சஹீஹான ஹதீஸ்களை பலவீனமானதாக மாற்றாதீர்கள்.

(தொஹ்ஃபா கோல்டுவியா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 133,134)

சகோதரர்களே! இரண்டாவது குற்றச்சாட்டு இதுவாகும். அதாவது சந்திர கிரகணம் ரமலானின் முதல் இரவில் ஏற்படவில்லை. மாறாக, பதினான்காம் நாளில் தான் ஏற்பட்டது. அதேபோன்று சூரிய கிரகணம் ரமலானில் பதினைந்தாவது நாளில் ஏற்படவில்லை. மாறாக, இருபத்தி எட்டாவது நாளில் தான் ஏற்பட்டது என ஆட்சேபனை செய்கின்றனர்.

இதற்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகம் தோன்றியதிலிருந்து இறைவன் சந்தி கிரகணத்திற்காக மூன்று இரவுகளை இயற்கை சட்டத்தில் நிர்ணயித்து வைத்துள்ளான். அதாவது 13, 14 மற்றும் 15 ஆகியவை.... மேலும் சூரிய கிரகணத்திற்காக மூன்று நாட்கள் அதாவது கமரி (சந்திர) மாதங்களில் 27, 28 மற்றும் 29 ஆகிய நாட்களை இறைவன் இயற்கை சட்டத்தில் நிர்ணயித்து வைத்துள்ளான்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 203)

ஆக, சந்திர கிரகணத்தின் முதல் நாள் என்பது எப்போதும் 13 ஆம் நாள் தான் என அறியப்படும். மேலும் சூரிய கிரகணத்தின் மத்திய நாள் என்பது எப்போதும் 28 ஆம் நாளாகும்.

(தொஹ்ஃபா கோல்டுவியா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 139)

சகோதரர்களே! எவ்வாறு அபுல் ஹகம் அபூ ஜஹில் ஆகினானோ அவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பகைமையில் ஆலிம்களை அல்லாஹ் அறிவீனர்களாக்கி விட்டான். முதலில் அவர்கள் இயற்கை சட்டத்திற்கு எதிராக கேட்கின்றனர். அதாவது முதல் நாள் சந்திரனுக்கு கிரகணம் ஏற்படவேண்டுமென கேட்கின்றனர். இரண்டாவது இந்த ஹதீஸில் வந்துள்ள கமர் என்ற வார்த்தையை அவர்கள் பார்ப்பதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த ஹதீஸில் ஹிலால் என்ற வார்த்தையில்லை. மாறாக, கமர் என்ற வார்த்தைதான் வந்துள்ளது. மூன்று நாட்கள் வரை நிலவை ஹிலால் என்று தான் அழைப்பார்கள். அதன் பின்னர்தான் கமர் என்று அழைப்பர் என்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த விஷயத்தில் அரபு நாட்டைச் சார்ந்தவர்கள் இன்றைய நாள் வரை ஒன்றுபட்டுள்ளார்கள். மேலும் எந்தவொரு அரபியும் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுமில்லை. மறுப்பதுமில்லை. உங்களுக்கு சந்தேகம் இருந்தால் காமூஸ், தாஜுல் உரூஹ், ஸஹாஹ் மற்றும் லிஸானுல் அரப் என்ற பெயரைக் கொண்ட பெரிய நூல் மேலும் அனைத்து அகராதிகள் மற்றும் இலக்கணம், கவிஞர்களின் கவிதைகள், முன்னவர்களின் கஸீதாக்கள் போன்றவற்றை கவனமாக பாருங்கள்.... நீங்கள் இதற்கு எதிராக நிரூபித்தால் நான் ஆயிரம் ரூபாய் தருகிறேன். ஆக, நீங்கள் நபிமார்களின் தலைவரின் கூற்றை, சான்றோர்களின் கூற்றுக்களை சரியான பொருளிலிருந்து மாற்றாதீர்கள்.

பலவீனமானவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். முழுமை பெற்றவராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்தில் தலையிடாதீர்கள். இது அரபி மற்றும் அரபியல்லாதவர்கள் பேசக்கூடியதை விட மிகவும் தெளிவானதும், கிழக்கு மற்றும் மேற்கிலுள்ளவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமாகும். அல்லாஹ் மற்றும் அவனது நபியின் கண்ணியத்தை பார்க்க மாட்டீர்களா? உங்களுக்கு என்னாவயிற்று?

(நூருல் ஹக், ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 197)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகம் படைக்கப்பட்டதிலிருந்து நபித்துவ வாதம் செய்த எவரக்காகவும் இந்த அடையாளம் வெளிப்படவில்லை. அவ்வாறு யாராவது நிரூபித்தால் அவருக்கு அன்னார் ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாக தருவதாக கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உங்களால் இதனைப் போன்ற ஒன்றை இதற்கு முந்தைய காலத்தில் இருந்து எடுத்துக் காட்ட முடியுமா? தற்போது நீங்கள் பார்ப்பது போன்று ஏதாவது ஒரு நூலில் ஒருவர் தன்னை இறைவன் புறமிருந்து வந்துள்ளதாக கூறி மேலும் அக்காலத்தில் ரமலான் மாதத்தில் சூரிய, சந்திர கிரகணம் நிகழ்ந்ததாக படித்துள்ளீர்களா? அவ்வாறு இருந்தால் கூறுங்கள். உங்களுக்கு ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாக தருகிறேன். ஆக, நிரூபியுங்கள். அன்பளிப்பை பெற்றுக் கொண்டு செல்லுங்கள்..... அவ்வாறு நிரூபிக்க முடியவில்லை என்றால் உங்களால் ஒருபோதும் நிரூபிக்க முடியாது. ஆகையால் தீயவர்களுக்காக ஆயத்தம் செய்து வைக்கப்பட்டுள்ள நெருப்பிற்கு அஞ்சுங்கள்.

(நூருல் ஹக், ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 211)

சகோதரர்களே! நான் மற்றொரு மகத்தான ஆதரவினைப் பற்றி கூறுகிறேன். அது முன்னறிவிப்புகள் ஆகும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அன்னாருடைய உண்மைத்துவத்திற்கு மகத்தான சான்றாக அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் நிறைந்த முன்னறிவிப்புகளை வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபித்துவத்தின் அடையாளங்களில் மகத்தான அடையாளமாகவும் மற்றும் அற்புதமாகவும் முன்னறிவிப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. முன்னறிவிப்புக்கு நிகரான எந்த அற்புதமுமில்லை. ஆகையால் இறைவனது நபிமார்களை அவர்களது முன்னறிவிப்புகள் மூலமாக கண்டறிய வேண்டும்.

(செக்சர் லூதியானா, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 253)

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகளை வழங்கியுள்ளான். அன்னார் தனது நூல் தர்யாக்குல் குலூபில் 75,

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: வெளிப்படையானதும், மறைமுகமானதுமாகிய தீய செயல்களையும், பாவம், நியாயமின்றிச் செய்யப்படும் கிளர்ச்சி ஆகியவற்றையும் சான்று எதுவும் இல்லாத நிலையில் நீங்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்தலையும் மேலும் நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது (இட்டுக்கட்டி) கூறுவதையும் நிச்சயமாக என் இறைவன் விலக்கியுள்ளான். (7:34)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 25 July 2019 Issue No. 30

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நுஸூலுல் மஸீஹில் 150 மற்றும் ஹகீக்கத்துல் வஹீயில் 208 முன்னறிவிப்புகளை அடையாளமாகவும், அற்புதங்களாகவும், விண்ணின் ஆதரவின் உதாரணமாக எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் எனது நூல் நுஸூலுல் மஸீஹைப் பாருங்கள். உங்களுக்கு இறைவன் அடையாளங்களை காண்பிப்பதில் எவ்வித பாரபட்சத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது புரிய வரும்..... எவ்வாறு பூமியின் ஒரு பெரும் பகுதி கடலினால் நிரம்பியுள்ளதோ அதே போன்று இந்த ஜமாஅத்தும் இறையடையாளங்களால் நிரம்பியுள்ளது. இறைவனின் ஏதாவது ஓர் அடையாளமாவது இறங்கப்படாத நாட்களே இல்லை.

(தஜல்லியாத்தே இலாஹியா, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 411)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூறுகிறேன். அதாவது நம்பிக்கையாளர்களுக்கு ஒரு சாட்சி போதுமானதாகும். அதிலேயே அவரது உள்ளம் நடுங்கி விடும். ஆனால் இங்கு ஒன்றல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான அடையாளங்கள் இருக்கின்றன. மேலும் என்னால் அதனை எண்ண முடியாது என உறுதியாக கூறுகிறேன்.

(லெக்சர் லூதியானா, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 257)

சகோதர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அடையாளங்களுக்கு மேல் அடையாளங்களைக் காட்டினார்கள். ஆனால் பகைவர்கள் அதனை மறுத்துக் கொண்டே சென்றார்கள். முபாஹிஸாவில் மவ்லவி ஸனாவுல்லாஹ் அமிர்தஸரி மிகவும் வெட்கமின்றி மிர்ஸா சாஹிபின் அனைத்து முன்னறிவிப்புகளும் பொய்யாக வெளிப்பட்டது என பொய் கூறினார். மேலும் இதனைத் தவிர பல பொய்களை கூறினார்.

இதற்கு பதிலாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஃஜாஸே அஹ்மதி என்ற தமது நூலை இயற்றினார்கள். அதில் மவ்லவி ஸனாவுல்லாஹ் அமிர்தஸரியின் பொய்களுக்கு பதிலாக அன்னார் இவர் உண்மையாளராக இருந்தால் காதியான் வந்து ஏதவாது ஒரு முன்னறிவிப்பை பொய்யாக நிரூபித்துக் காட்டட்டும். மேலும் ஒவ்வொரு முன்னறிவிப்பிற்கும் நூறு ரூபாய் வழங்கப்படும். மேலும் பயணச் செலவு தனியாக வழங்கப்படும் என எழுதினார்கள்.

(இஃஜாஸே அஹ்மதி, ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 118)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள்! நுஸூலுல் மஸீஹ் என்ற எனது நூலில் நான் 150 முன்னறிவிப்புகளை எழுதியுள்ளேன். இவ்வாறு அது பொய்யென நிரூபணமாகும் பட்சத்தில் மவ்லவி ஸனாவுல்லாஹ் சாஹிப் அவர்கள் பதினைந்தாயிரம் ரூபாயை பெறுவார்கள். மேலும் பொய் கூறுவதிலிருந்து இரட்சிப்பும் பெறுவார்கள். மேலும் ஒவ்வொரு முன்னறிவிப்பிற்கும் நூறு ரூபாய் என்ற இதே வாக்குறுதியுடன் நாம் ஏனைய நமது முன்னறிவிப்புகளை ஆதாரத்துடன் அவர்களிடம் வழங்குவோம். தற்போது ஒரு இலட்சத்தையும் விட அதிகமாக எனது ஜமாஅத் உறுப்பினர்கள் உள்ளனர். மவ்லவி ஸனாவுல்லாஹ் அமிர்தஸரிக்காக என்னைப் பின்பற்றுபவர்களிடம் ஒவ்வொரு ரூபாய் வாங்கினாலும் இரண்டு பைசாவிற்காக வீடு வீடாக மிகவும் மோசமான நிலையில் சுற்றுகிறார்.

இறைவனது தண்டனை அவர் மீது இறங்கியுள்ளது. மரணித்தவர்களுக்கு கஃபன் அணிவது அல்லது மக்களுக்கு அறிவுரை கூறுவதுன் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தைக் கொண்டு வாழ்ந்து வருகிறார். அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கிடைத்து விட்டால் அது அவருக்கு சொர்க்கமாகும். மேலும் அவர் எனது இந்த கூற்றின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் மேலும் நிபந்தனைக்கேற்ப காதியான் வரவில்லையென்றால் அவர் முபாஹிலாவின்போது பேசியது மேலும் வெட்கமில்லாமல் பொய் கூறியது (அவர் மீது) சாபமாகும்.

(இஃஜாஸே அஹ்மதி, ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 132)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது எந்த முன்னறிவிப்பும் நிறைவேறாமல் இல்லை.... எனது நாவிலிருந்து வெளிவந்த ஏதாவது ஒரு முன்னறிவிப்பு நிறைவேறாமல் இருந்ததாக நிரூபிப்பதற்கு ஒருவர் தேடித்தேடிப் பார்த்து மரணித்துப் போனாலும் அவருக்கு அவ்வாறு ஒன்றும் கிடைக்காது..... எனது ஆயிரக்கணக்கான வெளிப்படையான முன்னறிவிப்புகள் மிகவும் தெளிவாக நிறைவேறியுள்ளது என என்னால் உறுதியாக கூற முடியும். அதற்கு இலட்சக்கணக்கான மக்கள் சாட்சியாவார்கள். இதனைப்போன்ற ஒரு உதாரணத்தை முந்தைய நபிமார்களில் நீங்கள் தேடினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறெவரிடமும் அதனைக் காண முடியாது.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 6)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் எந்த அளவு என்னிடம் உரையாடுகின்றானோ எந்த அளவு மறைவான விஷயங்களை வெளிப்படுத்துகின்றானோ இதனைப் போன்ற அருள் ஹிஜ்ரி 13 ஆம் நூற்றாண்டில் இன்று வரை எவருக்கும் வழங்கப்படவில்லை. யாராவது இதனை மறுத்தால் அதனை நிரூபிப்பது அவரது கடமையாகும்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 406)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனக்கு எதிரில் உலகிலுள்ள அனைத்து சமுதாய மக்களையும் ஒன்றிணைத்து யாருக்கு இறைவன் மறைவான அடையாளங்களை காட்டுகின்றான் என்று ஆய்வு செய்தால் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான்தான் வெற்றி பெறுவேன்.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 181)

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad